# உயிரியல்

## அங்கிகளின் பிறபோசணை



Start Your Learning Journey with e-thaksalawa
The National e-learning Portal for The General Education

# பிறபோசணை

அங்கி ஒன்றினால் சேதன உணவு மூலக்கூறுகளை மற்றொரு அங்கியை அல்லது மற்றொரு அங்கியில் இருந்து பெறப்பட்ட பொருட்களை உள்ளெடுப்பதன் மூலம் பெற்றுக்கொள்ளப்படுவதாகும்.

**உதாரணம்:** விலங்குகள், பங்கசுக்கள், பெரும்பாலான பக்றீரியாக்கள்







**உள்ளெடுத்தல்:**
உண்ணல் அல்லது ஊட்டச்செயற்பாட்டின் முதற்கட்டம் ஆகும். உணவு அல்லது சுற்றுச் சூழலுக்கு ஏற்ப வேறுபட்ட ஊட்டல் முறைகளை கொண்டிருக்கும்.

**சமிபாடு:**
உணவு சிறிய துண்டுகளாக உடைக்கப்படும். பொறி முறைச் சமிபாட்டில் பற்களும், தசைகளும் உதவுகின்றன. இரசாயனச் சமிபாட்டில் நொதியங்கள் உதவுகின்றன.



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

**ஏனைய இரண்டு செயற்பாடுகள் நம் உணவுச் சமிபாட்டின் பின்னர் நடைபெறும்**

**அகத்துறிஞ்சல்:**
இதன் போது உடற்கலங்கள் சிறிய மூலக்கூறுகளை உள்ளெடுக்கின்றன
**Eg:** எளிய வெல்லங்கள், அமினோவமிலங்கள்

**தன்மயமாக்கல்:**
அகத்துறிஞ்சப்பட்ட போசணைப்பொருட்களை வெவ்வேறு தேவைகளுக்கு பயன்படுத்தல்

**மலமகற்றல்:**
இச்செயன்முறையின் போது சமிபாடடையாத மீதிகள் அகற்றப்படுகின்றன

## விலங்குகளின் ஊட்டல் முறைகள்

**1) வடித்துண்ணிகள்:**

தம்மைச் சூழவுள்ள நீர்த்தன்மையான ஊடகத்திலிருந்து தொங்கல் நிலையில் காணப்படும் துகள்களை வடிகட்டி உள்ளெடுக்கும்





Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

2) **திரவ உண்ணிகள்:**

நன்கு விருத்தியடைந்த வாயுறுப்புக்களை பயன்படுத்தி விருந்து வழங்கியிலிருந்து போசணை செறிந்த திரவத்தை உறிஞ்சிக்கொள்ளும்

**உதாரணம்:** நுளம்புகள் - மனித இரத்தத்தை உறிஞ்சும்
ஏபிட்டுக்கள் - தாவர உரியச் சாற்றை உறிஞ்சும்
பாடும் பறவைகள் - பூக்களில் இருந்து தேனை உறிஞ்சும்

**3) கீழ்ப்படை உண்ணிகள்:**

இவை தமது உணவு மூலங்களின் உள்ளே உணவின் மீது வாழ்ந்து உணவை உட்கொள்கின்றன

**உதாரணம்:** இலை சுரங்க மறுக்கும் மயிர்க்கொட்டி— இலைகளின் மென்மையான இழையங்களை உட்கொள்கின்றன

**4) திரள் உண்ணிகள்:**

ஒப்பீட்டளவில் பெரிய துண்டு அல்லது துகள்களாக உணவை உள்ளெடுக்கின்றன. இவ்விலங்குகள் இரையை கைப்பற்றவும் உணவை கிழிக்கவும் தாடைகள், பற்கள், பரிசக் கொம்புகள், உகிர்கள், நச்சுப் பற்கள் போன்றவற்றைக் கொண்டிருக்கும்

**உதாரணம்:** மனிதன் உட்பட அனேக விலங்குகள்

**ஒன்றிய வாழிகள் 3 வகைப்படும்**

1) ஒன்றுக்கொன்று துணையாகும் தன்மை
மனிதனும் Vitamin K ஐ உற்பத்தியாக்கும் சிறுகுடலுக்குரிய பற்றீரியாவும்

2) ஒட்டுண்ணிக்குரியது
நாடாப்புழுவும் மனிதனும்
பேனும் மனிதனும்

3) ஓரடாலுண்ணல்
சுறாவின் உடல் மேற்பரப்பில் ஒட்டியிருக்கும் பாணக்கிள்
மாடும் கொக்கும்

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk